<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு</u>

<u>வாக்குமூல படிவம்</u>

**<u>OS.No.52/2017</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. சுப்ரமணியன் | வா.சா | : 1 |
| த/பெயர் | : பழனிசாமிகவுண்டர் | தேதி | : 17.06.2026 |

வா.சாட்சி 1-ன் வாக்குமூலம் 1875ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு.கோ.ஜெகதீசன், இரண்டாம் நிலை இருக்கை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டுபிரமாணம் வாங்கப்பட்டது.

<u>பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை:-</u>

**1.** நான் முன்னர் குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்தபொழுது கடன் வாங்கியதாக சாட்சியமளித்துள்ள நிலையில் யாரிடம் கடன் பெற்றேன் என்றால், டிபிஎஸ் வங்கியில் கடன் பெற்றேன். எவ்வளவு ரூபாய் மேற்படி வங்கியில் கடன் பெற்றேன் என்றால், அன்றைய தேதியில் எவ்வளவு கடன் பெற்றேன் என்று எனக்கு தெரியாது. சுமார் 30 லட்சம் கடன் பெற்றிருப்பேனா? என்றால், அது எனக்கு ஞாபகம் இல்லை. எந்த வருடத்தில் கடனை திருப்பி செலுத்தினேன் என்றால், 2017ம் வருடத்திலேயே கடனை திருப்பி செலுத்தி விட்டேன். எந்த நிலத்தை அடமானம் வைத்து வங்கியில் கடன் பெற்றேன் என்றால், கொல்லப்பட்டியில் ஒரு பிளாட் இருந்தது அதனை அடமானம் வைத்து சிசியில் கடன் பெற்றேன்.

2. மேற்படி நிலத்திற்கு வில்லங்க சான்றிதழ் போட்டால் நான் எந்த வருடம், எவ்வளவு ரூபாய் கடன் வாங்கினேன் என்றும் எப்பொழுது திருப்பி செலுத்தினேன் போன்ற விபரங்கள் தெரியவரும் என்றால், சரிதான். மேற்படி வங்கி கடனை தவிர்த்து எனக்கு வேறு எந்த கடன்கள் இருந்தது என்றால், எனக்கு வேறு எந்த கடனும் இல்லை. 1995ஆம் வருடம் முதல் நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ5ன் முதல் பக்கம் மட்டும் வருமான வரி செலுத்தியதற்காக ஒப்புகையாக வருமான வரி துறையினால் வழங்கப்பட்டது என்றால், சரிதான். மேற்படி வா.சா.ஆ5ல் உள்ள 2 முதல் 4 வரையிலான பக்கங்களிலுள்ள பட்டியலானது யாரால் தயாரிக்கப்பட்டது என்பது குறித்து எவ்வித குறிப்போ, கையொப்பமோ இல்லையென்றால், சரிதான், அது தணிக்கையாளர் தயாரித்ததாகும்.

3. என்னுடைய தணிக்கையாளரின் பெயர் கணேசன் ஆகும். அவருடைய அலுவலகம் வேலூர் ரோட்டில் உள்ளது. 12.07.2023ம் தேதியன்று என்னை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டதற்கு பின்னர் தான் தணிக்கையாளரை சந்தித்து மேற்படி வா.சா.ஆ5ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டு முதல் நான்கு பக்கங்களை பெற்றேனா என்றால், இல்லை, ஏற்கனவே அவற்றை தணிக்கையாளர் அவரிடமிருந்து பெற்று வைத்திருந்தேன். என் தரப்பில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட முதல் விசாரணையின் பிரமாண வாக்குமூலத்தின் போது மேற்படி பட்டியலானது என் வசம் இருந்ததா என்றால், இருந்தது.

4. மேற்படி ஆவணமானது என் வசம் இருந்தும் அதனை அப்பொழுதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கான குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை என்றால், சரியல்ல, அதை நீதிமன்றத்தில் கொடுக்க வேண்டும் என்று எனக்கு தெரியாது. என்னுடைய மனைவியின் பெயர் மாதேஸ்வரி ஆகும். வா.சா.ஆ5 உடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கணக்கு பட்டியலில் மாதேஸ்வரியிடமிருந்து மூன்று லட்சம் ரூபாய் நான் கடன் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். எனக்கு லட்சுமி விலாஸ் வங்கியிலும் கணக்கு உள்ளது என்றால், சரிதான். மேற்படி வங்கியில் எவ்வளவு ரூபாய் கடன் பெற்றேன் என்றால், அது அப்பொழுது கடன் பெற்றதாகும் அது எனக்கு ஞாபகம் இல்லை. அந்த கடனை எப்பொழுது திருப்பி செலுத்தினேன் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கிற்கு பின்னர் திருப்பி செலுத்தி விட்டேன் என்றால். சரிதான்.

5. லட்சுமி விலாஸ் வங்கியில் பெற்ற கடனிற்கு எந்த சொத்தை அடமானம் வைத்தேன் என்றால், கொல்லம்பட்டியில் உள்ள அதே சொத்தை தான் அடமானம் வைத்து சிசி பெற்றேன். மேற்படி சொத்திற்கு வில்லங்க சான்றிதழ் பெற்றால் லட்சுமி விலாஸ் வங்கியில் உள்ள கடன் விபரம் மற்றும் ஏனைய வங்கிகளில் பெற்ற கடன் விபரம் தெரியவரும் என்றால், சரிதான். கொல்லம்பட்டியில் உள்ள நிலத்தின் புல எண் என்னவென்றால், அது எனக்கு தெரியவில்லை. என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ5 ஆனது வருமானவரித்துறையினர் அளித்த ஒப்புகையில் நான் இறந்து போன முத்துசாமிக்கு ரூபாய் 4 லட்சம் கொடுத்ததற்கான குறிப்பு எதுவும் இல்லை என்றால், மேற்படி முதல் பக்கத்தில் விவரங்கள் எதுவும் வராது அவ்விபரங்கள் அனைத்தும் இணைக்கப்பட்டுள்ள கணக்கு பட்டியலில் தான் வரும்.

6. வா.சா.ஆ5 உடன் இணைக்கப்பட்டுள்ள கணக்கு பட்டியலானது நான் அளித்த தகவலின் அடிப்படையில் தணிக்கையாளர் தயார் செய்து அலுவலக உபயோகத்திற்காக வைத்துக் கொள்ளப்படும் கணக்க பட்டியல் என்றாலும் அது வருமானவரித்துறையினருக்கு அனுப்பப்பட மாட்டாது என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி கணக்கு பட்டியலை வைத்து தான் நான் வருமான வரி செலுத்தினேன். உண்மையில் நான் இறந்து போன முத்துசாமிக்கு 4 லட்சம் ரூபாய் கடன் கொடுத்திருப்பேயானால் அதற்குரிய ஆவணத்தை என்னை 12.07.2023ம் தேதியன்று குறுக்கு விசாரணை செய்ததற்கு முன்னரே தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், நான் உண்மையில் முத்துசாமிக்கு கடன் கொடுக்காததால் தான் அது குறித்து முன்னர் நடைபெற்ற குறுக்கு விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றாலும், மேற்படி குறுக்கு விசாரணைக்கு தேதிக்கு பின்னர் வா.சா.ஆ5னை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியில்ல.

7. வா.சா.ஆ5 மோசடியான ஆவணம் என்பதால் தான் ஏற்கனவே கைவிடப்பட்ட ரிக்தொழிலில் வந்த வருமானமாக ஒரு வருமானத்தை மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எனக்கு ஏற்கனவே பல லட்சங்கள் கடன் இருக்கும் நிலையில் நான் முத்துசாமிக்கு 4 லட்சம் ரூபாய் கடன் கொடுத்ததாக கூறப்படுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால், சரியல்ல. வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட வா.சா.ஆ5 ஆவணத்தின் அடிப்படையில் நான் எவ்வித பலனும் அடைய இயலாது என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை.

G RUBANA

Digitally signed by G RUBANA
Date: 2026.06.17 17:24:46 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.